| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.ராஜாராம்<br>த.பெ. திரு. சந்திரராஜன் | அ.வ.எண்.290/2018 | 08.10.2025 |

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

5) 07.06.2018 தேதியில் எங்களது பேரூராட்சி அலுவலகத்திலிருந்து வாதி சித்ராவிற்கு அனுப்பப்பட்ட அறிவிப்பே என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் 3 வது காலத்தில் 24.03.2017 தேதியில் தங்கவேலு கொடுத்த மனுவின் அடிப்படையில் மேற்படி வா.சா.ஆ.7 அறிவிப்பு வாதி சித்ராவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.7 அறிவிப்பில் 16.07.2018 தேதியில் வாதி தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு எங்களது அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் அலுவலக கோப்புகளை பார்த்தால் தான் தெரியும். அப்படியானால் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு இவ்வழக்கு தொடர்பான கோப்புகளை நான் பார்வையிடவில்லை என்றால் தற்போது பார்வையிடவில்லை.

7) அப்படியானால் இவ்வழக்கு தொடர்பான கோப்புகளை நான் எப்போது பார்வையிட்டேன் என்றால் 6 மாதங்களுக்கு முன்பு. இன்று இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இவ்வழக்கு தொடர்பான கோப்புகளை நான் எடுத்துவரவில்லை என்றால் சரிதான். எங்களது அலுவலகத்திற்கு வாதி 16.06.2018 தேதியில் அனுப்பிய பதில் அறிவிப்பில், மேற்படி தங்கவேலு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.325/2017 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் மேற்படி வழக்கு சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை என்று

கூறியுள்ளதை குறிப்பிட்டுள்ளார் என்றால் மேற்படி விபரம் எனக்கு தெரியாது.

8) நீதிமன்ற ஆணையர் வழக்கின் சொத்தினை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு இல்லை என அறிக்கை தாக்கல் செய்த பிறகும், மேற்படி தங்கவேலு கொடுத்த மனுவின் பேரில் ஆக்கிரமிப்பு உள்ளதாக கூறி மீண்டும் வாதிக்கு இடையூறு செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் இலால்குடி வட்டாட்சியர் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில்.

9) பி.சா.ஆ.3 புலவரைபடத்தில் பழுப்பு நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி தங்கவேலுக்கு சொந்தமானதா அல்லது பேரூராட்சிக்கு சொந்தமானதா என்றால் தங்கவேலுக்கு சொந்தமானது. அப்படியானால் தங்கவேலுக்கு சொந்தமான இடத்தை அளக்க கோரி, எதன் அடிப்படையில் எங்களது பேரூராட்சியில் இருந்து இலால்குடி வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் எங்களது பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தை அளக்க கோரியே கடிதம் கொடுக்கப்பட்டது.

10) பி.சா.ஆ.3 புலவரைபடத்தில் தங்கவேலு இடத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவே வட்டாட்சியர் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களது பேரூராட்சியில் ஒரு தெருவில் ஆக்கிரமிப்பு இருந்தால் அந்த தெரு முழுவதையும் அளவீடு செய்வோம் என்றால் சரிதான். மேற்படி தெருவில் எந்த எந்த புல எண்களில் ஆக்கிரமிப்பு இருந்தது என்று கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

11) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேற்படி தங்கவேலு தாக்கல் செய்துள்ள நீதிபேராணை மனு எண்.17386/2022

மனுவில் தற்போதைய நிலை என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கில் மேற்படி நீதிபேராணை மனுவின் அடிப்படையிலேயே சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனவே நான் இவ்வழக்கு தொடர்பான எங்களது அலுவலக கோப்புகளையோ, மேற்படி நீதிபேராணை மனு எண்.17386/2022 மனுவின் தற்போதைய நிலையை குறித்தோ அறிந்து கொள்ளாமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தற்போது பார்க்கவில்லை.

12) வாதி பேரூராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மேற்படி தங்கவேலு மனு கொடுப்பதற்கு முன்பு அளவீடு செய்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. இவ்வழக்கு தொடர்பான எங்களது அலுவலக கோப்புகள் மற்றும், மேற்படி நீதிபேராணை மனு எண்.17386/2022 மனுவின் தற்போதைய நிலை குறித்து யாரை விசாரித்தால் விபரம் தெரியும் என்றால் எங்களது பேரூராட்சி செயல் அலுவலர்.

13) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எங்களது பேரூராட்சி செயல் அலுவலர் தான் எனக்கு 04.04.2024 ல் அனுமதி கடிதம் கொடுத்தார் என்றால் சரிதான், அன்றைய தினத்திற்கு மட்டுமே அனுமதி கொடுக்கப்பட்டது. அப்படியானால் அதற்கு பின்னிட்டு 14.10.2024 ல் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளித்திருந்தால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு குறித்து எனக்கு எவ்வித விபரமும் தெரியாததால் இவ்வழக்கில் நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.